மாணவர்கள் அந்த விடுதியிலே தங்கிப் படிக்க முடியாத அவல நிலைமை இருப்பதை உணர்ந்து, அவர்களுக்கு என்ன செலவாகிறதோ அதே தொகையை வருங்காலத்தில் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு.எம்.விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரியில் பயிலுகின்ற மாணவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், என்னையும் சந்தித்து, இத்தகைய கோரிக்கைகளைத் தந்ததன் விளைவாகத் தான் தற்போது அரசு இத்தகைய முயற்சிகளை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மைய அரசின் உதவித்திட்டத்தின் கீழ் எல்லா மாணவர்களுக்கும் சேர்த்து ஏற்படும் ஒட்டு மொத்தமான தொகையை அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்கப்பட்டது. இது சம்பந்தமாக இவ்வரசின் முன் மொழிவுகள் மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதன் அடிப்படையில் இந்த அரசு இதனைப் பொருத்த அளவிலே இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டு மைய அரசின் ஆலோசனைப் பெற்று தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும்.

ஆதிதிராவிடர் நல வட்டாட்சியர் அலுவலகங்களில் சர்வேயர்களை நியமித்தல்.

*வினா எண்.945 திரு. அ. நாஞ்சில் கலைமாறன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) புதிதாக நிறுவப்பட்டுள்ள 29 அரிசன நல வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் தேவையான சர்வேயர்கள் நியமனம் செய்யப்படாததால் நில ஆர்ஜித பணிகள் தடைப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் புதிய சர்வேயர்களை அரசு எப்போது நியமிக்கும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ): புதிதாக நிறுவப்பட்டுள்ள 29 அரிசன நல வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் தேவையான சர்வேயர்கள் நியமனம் செய்வது பற்றிய செயற்குறிப்பு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நல இயக்குநர் அவர்களிடமிருந்து அரசுக்கு கிடைத்துள்ளது. அச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. நில ஆர்ஜித பணிகள் கூடுதலான சர்வேயர்கள் நியமிக்கப்படாததால் தடைப்பட்டுள்ளதாக தகவல் ஏதும் இதுவரை அரசுக்கு வரவில்லை.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, தற்போதுள்ள அரிசனநல வட்டாட்சியர்அலுவலகங்களில் போதுமான அளவிற்குச் சர்வேயர்கள் இல்லாத காரணத்தால், அந்த அரிசன மக்களுக்கு

வழங்கப்பட்ட வீட்டு மனைகள் கூட சர்வே செய்து கொடுக்கப் படாமல் ஆண்டுக்கணக்கில் தாமதமாகிவருகிறது. அது மட்டுமல்ல, இரண்டு மூன்று வட்டங்களுக்குச் சேர்ந்து ஒரு அரிசன நல வட்டாட்சியர் இருக்கிறார். அவருக்கு ஜீப் வசதி கூட கிடையாது. அந்த வசதி இல்லாததால் வேலைகள் மிகமிகத் தாமதமாகிறது. மத்திய அரசு வீட்டுமனைகள் கொடுக்கும் நிதி கூட சரிவர பயன் படுத்தப்படமுடியாமல் இருக்கிறது. ஆகவே, வட்டத்துற்கு ஒரு அரிசன நல வட்டாட்சியர், போதுமான சர்வேயர்களை நியமித்து, அந்தப் பணிகளைத் துரிதப்படுத்தி, அந்த வேலைகளைச் செய்வதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் 29 உதவியாளர் பதவிகளும், 8 இளநிலை உதவியாளர் பதவிகளும் 29 ஆய்வாளர் பதவிகளும், 31 எங்கிலியர் பதவிகளும் மற்றும் அலுவலகங்களுக்குத் தேவையான நாற்காலி மேஜை போன்ற மரச் சாமான்கள் வாங்குவதற்கும், அந்த 29 தனி வட்டாச்சியர் அலுவலகங்கள் வாடகைக்கட்டிடங்களில் அமைக்க மற்றும் மின்சாரம் போன்ற சில வசதிகளும் சேர்த்து மொத்தமாக ஒரு மதிப்பீட்டை ஆதிதிராவிட இயக்குனர் அரசுக்குச் சமர்ப்பித்து உள்ளார். அந்த மதிப்பீட்டுத்தொகை ரூ.10 லட்சத்திற்கு இருக்கிற காரணத்தால், அதை அரசு பரிசீலித்து, அதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. வட்டத்திற்கு ஒரு தனி வட்டாட்சியர் என்ற முறை இதுவரையில் செயல்படுத்தப்படவில்லை. அதை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவர் அவர்களே. 10 ஆண்டு காலமாக வீட்டு மனை கொடுத்தும், அந்த இடங்கள் சர்வே செய்யப்படாமல் இருப்பதால், யார் யாருக்கு எந்தெந்த இடம் என்று தெரியாமல் இருக்கிறது. ஆகவே, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அந்த நிலத்தை சர்வே செய்து அந்தந்த இடங்களை அவர்களுக்குக் கொடுக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

பேரையூரில் ஆதிதிராவிடர் மாணவர்கள் தங்கும் விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண் 946 திரு கே. தனக்கோடித்தேவர்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பேரையூரில் அரிசன நலத்துறையால் மாணவர்கள் தங்கும் விடுதி ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?